## அவசரக்கூட்டம்

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 24.12.2019 | **பொருள் எண் 1**<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட லெட்சுமாங்குடி கிராமம், பழைய சர்வே எண் 117/3, வார்டு 2, பிளாக் 11, புதிய நகரளவு எண் 3/1ல் 4000 சதுர மீட்டர் 0.99 சென்ட் நிலம், அரசின் ஒப்புதல் பெறப்பட்ட கூத்தாநல்லூர் முழுமை திட்டத்தில் விவசாய பகுதியாக உள்ளது. மேற்படி இடம் விவாசய பகுதியாக உள்ளதை வணிக பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்து அரசாணை பெற்று தருமாறு மேற்படி இடத்தின் உரிமையாளராகிய திரு.ஜாகிர்உசேன், பக்கீர்மஸ்தான் தெரு, பூதமங்கலம் அவர்கள் இந்நகராட்சிக்கு விண்ணப்பித்துள்ளார். இதன் மீது ஆலோசனை மற்றும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்புவோர், 30 நாட்களுக்குள் கூத்தாநல்லூர் உள்ளூர் திட்ட குழும உறுப்பினர் செயலருக்கு (ஆணையர், கூத்தாநல்லூர்) எழுத்து மூலமாக தெரிவிக்க கேட்டு தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் கடந்த 14.11.2019ல் விளம்பர பிரசுரம் செய்யப்பட்டது. எனவே மனுதாரர் விண்ணப்பித்துள்ளவாறு நிலப்பயன்பாடு மாற்றம் கோரும் மேல்முறையீடு முன்மொழிவுகளை நகர் ஊரமைப்பு இயக்குநர் 807, அண்ணாசாலை சென்னை மற்றும் நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்கள் வழியாக அரசு செயலாளர் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை சென்னை அவர்களுகககு பரிந்துரை செய்து அனுப்பிட நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். /2019/இ1) | **தீர்மானம் எண்:- 623**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 24/.12.2019 | **<u>பொருள் எண் 2</u>**<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 40032/2012/ஆர்1 நாள் 04.12.2019ன்படி இந்நகராட்சியில் சொத்துவரி திருத்தம்/மறு அளவீடு / உயர்வு செய்யப்பட்டது தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்து பொதுமக்கள், பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட மறு அளவீடுகள் செய்யப்பட்டது ஆட்சேபணை விண்ணப்பங்கள் -820, மற்றும் மண்டல வாரியாக உயர்வு செய்தது குறித்து வரப்பெற்ற விண்ணப்பங்கள் - 464 விண்ணப்பங்கள் மற்றும அதன் இணைப்புகள் 6050 பக்கம் நகல் எடுக்கப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அலுவலகத்திற்கு அனுப்பிட ஏதுவாக மேற்கண்ட விண்ணப்பங்கள் நகல் எடுப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1105/2018/அ1) | **தீர்மானம் எண்:- 624**<br>**அனுமதிக்கப்பட்டது** |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி

<u>சாதாரண கூட்டம்</u>

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் நாள் செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 31.12.2019 | **<u>பொருள் எண் 1</u>**<br>நகராட்சி ஆணையர் ((மு.கூ.பொ) அவர்களது நவம்பர் 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 625**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.12.2019 | **<u>பொருள் எண் 2</u>**<br>நகராட்சி நகராட்சி பொறியாளர் அவர்களது நவம்பர் 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 626**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.12.2019 | **<u>பொருள் எண் 3</u>**<br>கூத்தாநல்லூர் நகராட்சி பகுதிக்கு 42.04 கி.மீ தொலைவிற்கு சாலைகள் அமைக்கவும் நகராட்சி பகுதியில் சேதமடைந்த குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றி புதிய குடிநீர் குழாய் அமைக்கவும் அப்பகுதியில் 1 லட்சம் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கவும் ரூ.32.00 இலட்சத்திற்கு இந்நகர் மன்றம் தனது தீர்மான எண் 376 நாள் 06.09.2018ல் அனுமதி அளித்தும், அதற்கான முழுமையான தொகை எதுவும் விடுவிக்கப்படாத நிலையில், நகராட்சி மூலம் 5.40 கி.மீ அளவிற்கு சாலை அமைக்க பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதில் ஐந்து சிப்பங்களாக பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 3 சிப்பங்கள் 3.710 கி.மீ தொலைவிலான சாலைகள் மட்டுமே முடிக்கப்பட்டது, தற்போது இந்நகராட்சி திருவாரூர் மாவட்டத்திலுள்ள நகராட்சிகளில் மிகவும் பின்தங்கிய நகராட்சிகளில் ஒன்றாகும், விவசாயம் மற்றும் பிற தொழில்கள் இல்லாத நகராட்சியாகவும் உள்ளதால் பொது நிதியிலிருந்து மேற்படி பணிகளை இத்திட்டத்திலிருந்து ஈடு செய்ய இயலாத நிலையில் இருந்த காரணத்தால், மேற்கண்ட நகர்மன்ற தீர்மானத்தில் நிறைவேற்றியுள்ளபடி எடுத்துக் கொள்ளப்பட்ட அனைத்து | **தீர்மானம் எண்:- 627**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>பணிகளுக்கும் தொகை ஏதும் அரசிடமிருந்து விடுவிக்கப்படாத நிலையில் பொதுநிதியில் ஈடு செய்ய முடியாத நிலையில் இருப்பதால் இப்பணியினை மேற்கொள்ள முடியவில்லை. மேலும் இந்நகராட்சியில் தினசரி 90 LPCD அளவில் காலை மற்றும் மாலை தினசரி இருவேளைகளில் 3 மணி நேரம் குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருவதால் நாகங்குடி பகுதியில் குடிநீர் விநியோகம் தங்குதடையின்றி அனைத்து வீடுகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட நாகங்குடி நீர்தேக்க தொட்டி மற்றும் அப்பணிக்கு பகிர்மான குழாய் அமைக்கும் பணியினை தற்காலிகமாக கைவிடலாம். மேலும் மேற்கண்ட பணியினை ரத்து செய்தும் இந்த பணிக்கான டெபாசிட் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.64,000/-த்தை ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td>31.12.2019</td><td><u>பொருள் எண் 4</u><br>இந்நகராட்சி பகுதியில் உள்ள வாய்க்கால்களை சுத்தம் செய்வதற்கு ஒரு JCB இயந்திரம் வாடகைக்கு வழங்கும் பணிக்கு 23.12.2019 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.சாய்ராம் ஸ்ரீ ஆண்டாள் எர்த் மூவர்ஸ்</td><td>49400</td><td>49348</td><td>0.11% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.விஜய்குமார் எர்த்மூவர்ஸ் வடபாதி</td><td>49400</td><td>51480</td><td>4.21% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.சாய்ராம் ஸ்ரீ ஆண்டாள் எர்த் மூவர்ஸ் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.11% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 1029/2019/எச்1)</td><td>தீர்மானம் எண்:- 628<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>31.12.2019</td>
<td>
<u>பொருள் எண் 5</u><br>
இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு ஒரு டிப்பர் டிராக்டர் 15 தினங்களுக்கு வாடகைக்கு வழங்கும் பணிக்கு 23.12.2019 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.சாய்ராம் ஸ்ரீ ஆண்டாள் எர்த் மூவர்ஸ்</td><td>46800</td><td>46680</td><td>0.26% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.விஜய்குமார் எர்த்மூவர்ஸ் வடபாதி</td><td>46800</td><td>48420</td><td>3.46% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.சாய்ராம் ஸ்ரீ ஆண்டாள் எர்த் மூவர்ஸ் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.26% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
(ந.க.எண். 1030/2019/எச்1)
</td>
<td>தீர்மானம் எண்:- 629<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.12.2019</td>
<td>
<u>பொருள் எண் 6</u><br>
இந்நகராட்சி பகுதியிலுள்ள 24 வார்டுகளிலும் மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள திறந்தவெளி கழிப்பிடமற்ற நகரத்திற்கான வழிமுறை கையேட்டில் குறிப்பிட்டுள்ளவாறு சுய உதவிக்குழுக்கள், பள்ளிகள் மற்றும் குடிமக்கள் பிரதிநிதிகள் ஆகியோரிடம் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகரமென சுய அறிவிப்பு பெறப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியினை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி கழிப்பிடமற்ற (ODF++) நகரமாக சுய அறிவிப்பு செய்யவும் மேற்படி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும் மற்றும் இதர செலவினங்களுக்காகவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண். 1051/2015/எச்1)
</td>
<td>தீர்மானம் எண்:- 630<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 31.12.2019 | **<u>பொருள் எண் 7</u>**<br>கூத்தாநல்லூர் நகராட்சி உரக்கிடங்கில் கசடு கழிவு மற்றும் கழிவுநீர் மேலாண்மை மையம் (FSTP) அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி 26.06.2019 அன்று கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தபுள்ளியினை செய்தி மக்கள் தொடர்புதுறை சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. மேற்படி ஒப்பந்தபுள்ளியினை விளம்பரம் செய்ய Mark Media Communication, Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 31.05.2019 அன்று இரண்டு நாளிதழ்களில் ஒப்பந்தபுள்ளி விளம்பரம் வரப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.24,780/-ஐ Mark Media Communication Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 1695/2018/இ1) | **தீர்மானம் எண்:- 631**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.12.2019 | **<u>பொருள் எண் 8</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட குடிநீர் பகிர்மான குழாய்களில் அமைக்கப்பட்ட வால்வு தொட்டிகள் மற்றும் சிலாப்புகள பழுதடைந்துள்ளதால் போக்குவரத்திற்கும் குடிநீர் வழங்குவதற்கும் சிரமமாக உள்ளதால் அதனை சீர் செய்திட ஆகும் மதிப்பீடு ரூ.80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 1108/2019/இ1) | **தீர்மானம் எண்:- 632**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.12.2019 | **பொருள் எண் 9**<br>இந்நகராட்சிக்கு உட்பட்ட அலுவலக பம்ப் அறையில் உள்ள 12.5 HP மோட்டார் 7.5 HP Submersible Motor, Standby யாக உள்ள 12.5 HP மோட்டார் 200MM வால்வு பழுது, கீழபணங்காட்டாங்குடி மோட்டார், கோரையாறு மோட்டார் மற்றும் மரக்கடை சிவன் கோவில் அருகில் உள்ள 20 HP Submersible Motor சீர் செய்தும் காயில் கட்டியும் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீடு ரூ.1,70,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 1112/2019/இ1) | **தீர்மானம் எண்:- 633**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 31.12.2019 | **பொருள் எண் 10**<br>இந்நகராட்சிக்கு உட்பட்ட கமாலியா தெரு,சின்னப்பள்ளி தெரு சந்தில் உள்ள கான்கிரிட் பாலம் பழுதடைந்து போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளதால் அதனை 4 மீட்டர் நீளத்திற்கு உடைத்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக காங்கிரிட் பாலம் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீடு ரூ.15,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 1109/2019/இ1) | **தீர்மானம் எண்:- 634**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.12.2019 | **பொருள் எண் 11**<br>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள அலுவலக ஆயில் எஞ்சின் 7.5 HP திறன் கொண்டது. அதனை மழைக்காலங்களில் இயக்குவதற்கு ஏதுவாக சீர் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், புளியங்குடி சுகாதார வளாகத்தில் உள்ள 1.5 HP பழுதடைந்த Submersible Motor னை சீர் செய்யவும் ஆகும் மதிப்பீடு ர.55,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 1109/2019/இ1) | **தீர்மானம் எண்:- 635**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.12.2019 | **பொருள் எண் 12**<br>இந்நகராட்சிக்கு உட்பட்ட புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு புதிதாக மின்மாற்றி அமைத்து மும்முனை மின்சாரம் வழங்கிட ஏதுவாக மின் மாற்றிக்கு அடித்தளம் மற்றும் சுவர் அமைத்திட ஆகும் மதிப்பீடு ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** பொதுநிதியில் மேற்கொள்ளலாம். | **தீர்மானம் எண்:- 636**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 31.12.2019 | **பொருள் எண் 13**<br>இந்நகராட்சிக்கு உட்பட்ட 11வது வார்டு மரக்கடை மெயின் சாலையின் அருகில் உள்ள மண்சாலையினலால் மழைக்காலங்களில் குண்டும் குழியுமாக உள்ளதால் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது, எனவே அதனை கிராவல் சாலையாக அமைத்திட ஆகும் மதிப்பீடு ரூ.1,30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 1106/2019/இ1) | **தீர்மானம் எண்:- 637**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.12.2019 | **பொருள் எண் 14**<br>இந்நகராட்சிக்கு உட்பட்ட பாரதி நகர், சிஸ்தி நகர், சித்தாத்தங்கரை, இந்திரா நகர், கலைஞர் காலனி, மரக்கடை மெயின் ரோடு மற்றும் இதர பகுதிகளில் புதிதாக குடிநீர் குழாய் அமைத்திடவும் அரசின் சிறப்பு திட்டமான Internal Plumbing திட்டத்தினை நகர் முழுவதும் செயல்படுத்திடவும் அதற்கான மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 1111/2019/இ1) | **தீர்மானம் எண்:- 638**<br>**அனுமதிக்கப்பட்டது** |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி